# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, குடிசனமதிப்பு (திருத்தச்) சட்டம்

---

(2011 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2011, மே மாதம் 06 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.50** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2011 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, குடிசனமதிப்பு (திருத்தச்) சட்டம்*

[*2011 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 4/2010*

### *(143 ஆம் அத்தியாயமான) குடிசனமதிப்பு கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, குடிசனமதிப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*143 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடிசனமதிப்பு கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவானது, அதன் (4) ஆம் உட்பிரிவில் "பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப் படுகின்றது :-

*"மாவட்ட செயலாளர் குடிசன மதிப்பு ஆணையாளராதல்.*

6. ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் அவர் எந்த மாவட்டம் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த நிர்வாக மாவட்டத்தினுள் அவரால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அல்லது நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு மேலதிகமாக அத்தகைய மாவட்டம் தொடர்பில் குடிசனமதிப்பு ஆணையாளராக நியமிக்கப்படுதலும் வேண்டும் :

ஆயின், மாவட்ட செயலாளரை குடிசனமதிப்பீட்டு ஆணையாளராக நியமிப்பது செயல்முறைச் சாத்தியமற்றது எனத் தோன்றுமிடத்து அமைச்சர்,

2-PL 005564 -1,090 (2011/03)

விடயத்திற்கேற்ப, அத்தகைய நிருவாக மாவட்டத்திற்கு அல்லது அதன் பாகத்திற்கு குடிசனமதிப்பு ஆணையாளராக வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவின் (1) ஆம் உப்பிரிவில், "பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உப்பிரிவில், "பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அப்பிரிவின் (3) ஆம் உப்பிரிவில், "பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்